# Tnpsc Model Question Paper 25 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. சிப்கோ இயக்கத்தை முன்னின்று நடத்தியவர்
(அ) கைலாஷ் வித்யார்தி (ஆ) மேதா பட்கர்
(இ) அண்ணா ஹசாரே **(ஈ) சுந்தர்லால் பகுகுணா**

2. இயற்கை தேர்வு கோட்பாடு முன்மொழிந்தவர்
(அ) லெமார்க் (ஆ) C.D.டார்லிங்டன் **(இ) சார்லஸ் டார்வின்** (ஈ) ஹென்ஸ்லோ

3. விடுபடு திசைவேகமானது
(அ) அனைத்து கோள்களுக்கும் மாறாதது
**(ஆ) கோளுக்கு கோள் மாறுபடும்**
(இ) உட்புற கோள்களில் வெளிப்புற கோள்களை விட குறைவு
(ஈ) புவிக்கு மட்டும் பொருந்தும்

4. பின்வருவனவற்றுள் எது ஆக்டேன் எண் பூஜ்ஜியம் ஆக உள்ளது?
**(அ) *n*–ஹெப்டேன்** (ஆ) ஐசோஆக்டேன் (இ) *n*–ஹெக்சேன் (ஈ) ஐசோஹெப்டேன்

5. பின்வருவனவற்றில் எந்த செவ்வாய் விண்கல திட்டங்கள்/திட்டம் தவறாக இணைக்கப்பட்டுள்ளது?
1. டியான்வென்–1 – கோள்களின் ஆய்வு – சீனா
2. ஐக்கிய அரபு எமிரகத்தின் விண்கலம் – நம்பிக்கை ஆர்பிட்டர்
3. NASA–விடாமுயற்சி ரோவர்
4. இந்தியா – தொழில் நுட்ப செயல்விளக்க செயற்கைக் கோள்
(அ) 1 மற்றும் 2 மட்டும் (ஆ) 2 மற்றும் 3 மட்டும்
**(இ) 4 மட்டும்** (ஈ) 1, 2 மற்றும் 3 மட்டும்

6. உலகில் எந்த நாடு முதன்முதலாக 100 மில்லியன் கோவிட்–19 தடுப்பூசி செலுத்தப்பட்டு இலக்கை அடைந்தது?
**(அ) இந்தியா** (ஆ) பூடான் (இ) ரஷ்யா (ஈ) அமெரிக்கா

7. திராவிட இயக்கம், திராவிடக் கழகத்தை --------- தலைமையில் உருவாக வழி வகுத்தது.
(அ) சி.என்.அண்ணாதுரை (ஆ) மு.கருணாநிதி **(இ) ஈ.வே.ராமசாமி** (ஈ) எம்.ஜி.ராமச்சந்திரன்

8. திட பாறையை பல்வேறு வகைப் பொருட்கள் சூழ்ந்து காணப்படுகின்ற, இழக்கமான அடுக்கு எது?
(அ) பாத்தோலித் **(ஆ) ரேக்கோலித்** (இ) கிரானைட் (ஈ) மார்பிள்

9. காவேரி நதியானது தனக்குத்தானே -------- எனும் இடத்தில் கொலரூன் மற்றும் காவேரியாக இரண்டு கால்வாய் நதிகளாக பிரிகிறது
(அ) விழுப்புரம் (ஆ) திருச்சிராப்பள்ளி **(இ) ஸ்ரீரங்கம்** (ஈ) மதுரை

10. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றிற்கான சரியல்லாத விளக்கத்தினை கண்டறிக:
"இந்திய மக்கட்தொகையின் நிலை எவ்வாறுள்ளதென்றால் பிறப்பு விகிதம் குறைந்து கொண்டிருக்கிறது. இறப்பு விகிதமும் குறைந்து கொண்டிருக்கிறது மேலும் மக்கட்தொகை வளர்ந்து கொண்டே இருக்கிறது"
(அ) குடும்ப கட்டுப்பாடு **(ஆ) சமுதாய பொறுப்பு அதிகரித்தல்**
(இ) வாழ்க்கைத் தரம் அதிகரித்தல் (ஈ) மாற்றம் அடையும் பெண்கள் நிலை

11. டெல்லி சுல்தானியர்களின் காலத்தில் "கராஜ்" என்பது எதன் மீது விதிக்கப்பட்ட வரி
(அ) வீடு **(ஆ) விவசாய நிலம்** (இ) சமயம் (ஈ) வணிகம்

12. பாமினி அரசினைத் தோற்றுவித்தவர்
(அ) மாலிக்கபூர் (ஆ) புக்கர் (இ) ஹரிஹரா **(ஈ) அலாவுதீன் ஹசன் பாஹ்மன் ஷா**

13. "தேசிய சமூக மாநாடு" கூட்டத்தை ஒருங்கிணைத்தவர்
(அ) பண்டித ரமாபாய் **(ஆ) எம்.ஜி.ரானடே**
(இ) தோந்து கேசவ் (ஈ) வீரசலிங்கம் பந்துலு

14. இந்தியாவில் முதன் முதலில் எந்த மாநிலம் மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்டது?
(அ) கேரளா **(ஆ) ஆந்திரா** (இ) கர்நாடகம் (ஈ) தமிழ்நாடு

15. "இந்திய ஷேக்ஸ்பியர்" என அழைக்கப்படுபவர் யார்?
**(அ) காளிதாசர்** (ஆ) விசாகதத்தர் (இ) சுத்ரகர் (ஈ) ஹரிசேனர்

16. பண மசோதா:
1. மாநிலங்களவையில் இதை அறிமுகப்படுத்த முடியாது.
2. சபாநாயகரால் சான்றளிக்கப்பட வேண்டும்.
3. மாநிலங்களவையால் திருத்தப்படலாம்.
4. குடியரசுத் தலைவர் தாமதமின்றி ஒப்புதல் அளிக்க வேண்டும்
கீழே கொடுக்கப்பட்டுள்ளவை கொண்டு மேலுள்ள கூற்றுகளில் எவை சரியானவை எனத் தேர்ந்தெடுக்கவும்:
(அ) 1, 2, 3 மற்றும் 4 **(ஆ) 1, 2 மற்றும் 4 மட்டும்** (இ) 2, 3 மற்றும் 4 மட்டும் (ஈ) 1 மற்றும் 4 மட்டும்

17. பெண்கள் மேம்பாடு குறித்துக் கீழ்வருவனவற்றுள் எது/எவை சரியானது/சரியானவை?
1. முடிவெடுத்தலில் பெண்களின் ஈடுபாட்டினை அதிகரித்தல்.
2. பெண்களைத் தொழில் முனைவோராக ஊக்குவித்தல்.
3. முறைசாரா அமைப்புகளில் பெண்களின் பணிநிலையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குதல்
(அ) 1 மட்டும் (ஆ) 1 மற்றும் 3 ஆகியன மட்டும்
(இ) 1 மற்றும் 2 ஆகியன மட்டும் **(ஈ) 1, 2 மற்றும் 3 ஆகியவை**

18. பின்வருவனவற்றைப் பொருத்துக:

| உயர்நீதிமன்றம் | தொடங்கப்பட்ட ஆண்டு |
|---|---|
| அ. அலகாபாத் | 1. 1884 |
| ஆ. கர்நாடகா | 2. 1916 |
| இ. பாட்னா | 3. 1866 |
| ஈ. மதராஸ் | 4. 1862 |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **3** | **1** | **2** | **4** |
| ஆ. | 1 | 3 | 4 | 2 |
| இ. | 4 | 1 | 3 | 2 |
| ஈ. | 1 | 4 | 2 | 3 |

19. சரக்கு மற்றும் சேவை வரி (GST)--------- இலக்கை அடிப்படையாகக் கொண்டது
**(அ) பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு** (ஆ) விவசாயப் பண்டங்களின் நுகர்வு
(இ) சேமிப்பு முறை (ஈ) தொழில் பண்டங்களின் நுகர்வு

20. -------- இந்தியாவில் மத்திய–மாநில அரசுகளுக்கு வங்கியாக செயல்படும் வங்கியாகும்.
(அ) வளர்ச்சி வங்கிகள் (ஆ) ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
(இ) மத்திய–மாநில கூட்டுறவு வங்கிகள் **(ஈ) இந்திய ரிசர்வ் வங்கி**

21. --------- மாதிரி நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையாக இருந்துள்ளது
(அ) ஹரோடு–டோமர் மாதிரி **(ஆ) சி.ஈஎல்பி மாதிரி**

(இ) மகாலனோபிஸ் மாதிரி (ஈ) சக்ரவர்த்தியின் மாதிரி

22. மதுவுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது, பிச்சைக்காரர் மறுவாழ்வு எந்தத் துறையின் கடமை
(அ) மனிதவள மேம்பாட்டுத்துறை
(ஆ) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை
**(இ) சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்**
(ஈ) எதுவும் இல்லை

23. கிரிப்ஸ் தூதுக் குழுவின் தீர்மானத்தைப் "பின் தேதியிட்ட காசோலை" என்று கூறியவர்
(அ) நேரு (ஆ) M.A.ஜின்னா **(இ) காந்திஜி** (ஈ) சர்தார் படேல்

24. 1914–ல் சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டின் தலைவராக இருந்தவர் யார்?
**(அ) பூபேந்திர நாத் போஸ்** (ஆ) மதன் மோகன் மாளவியா
(இ) விஜயராகவாச்சாரியார் (ஈ) எம்.ஏ.அஞ்சரி

25. கீழ்கண்டவற்றுள் சரியான கூற்று எது?
**(அ) வி.டி.சவார்க்கர்–1857 சிப்பாய்க் கலகம்** (ஆ) வல்லபாய் படேல்–முதல்பிரதம மந்திரி
(இ) அன்னிபெசன்ட்–ஆரிய சமாஜம் (ஈ) சி.ஆர்.தாஸ்–சைமன் குழு

26. எந்த இடத்தில் சங்ககால சோழர்களின் காசுகள் தொல்லியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டன?
**(அ) அரிக்கமேடு** (ஆ) கரூர் (இ) தஞ்சாவூர் (ஈ) உறையூர்

27. எந்த பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மனுடன் கூட்டு வைத்துக் கொள்ளவில்லை?
(அ) சாப்டூர் பாளையக்காரர் (ஆ) ஏழாயிரம் பண்ணை பாளையக்காரர்
(இ) காடல் குடி பாளையக்காரர் **(ஈ) சிவகிரி பாளையக்காரர்**

28. தமிழகத்தின் முதல் தனிநபர் சத்யாகிரகி என்று கருதப்படுபவர் யார்?
**(அ) முனைவர் T.S.S.ராஜன்** (ஆ) வினோபாபாவே
(இ) க.காமராசர் (ஈ) எஸ்.சத்யமூர்த்தி

29. வேலூர் கலகத்தின் போது இந்திய ராணுவ வீரர்கள் யாருடைய கொடியை ஏற்றினார்கள்?
**(அ) திப்பு சுல்தான்** (ஆ) ஆற்காட்டு நவாப் (இ) மராத்தியர்கள் (ஈ) மருது பாண்டியர்கள்

30. கலெக்டர் ஜாக்சன் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் ராமநாதபுரம் சந்திப்பு நிகழ்வை குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட விசாரணை குழுவில் இடம் பெற்றவர்கள்
1. வில்லியம் பிரௌன்.
2. வில்லியம் ஓர்ம்.
3. ஜான் காஸ்மேயர்.
4. எஸ்.ஆர்.லஷ்ஷிங்டன்
(அ) 1, 2 மட்டும் (ஆ) 2, 3 மட்டும் (இ) 3, 4 மட்டும் **(ஈ) 1, 2 மற்றும் 3 மட்டும்**

31. இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் யார்?
(அ) ஆனந்திபாய் ஜோஷி **(ஆ) அன்னிபெசன்ட்**
(இ) பண்டித ராமாபாய் (ஈ) ஸ்வர்ணகுமாரி

32. அன்னிபெசன்ட், அருண்டேல் மற்றும் வாடியா ஆதரவுடன் மெட்ராஸில் தன்னாட்சி இயக்கம் (ஹோம் ரூல் லீக்) உருவாக்கப்பட்ட ஆண்டு
(அ) 1912 (ஆ) 1914 (இ) 1915 **(ஈ) 1916**

33. தமிழ்நாட்டில் 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி எந்த மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் குறைவாக உள்ளது?

(அ) மதுரை (ஆ) தேனி (இ) வேலூர் **(ஈ) கடலூர்**

34. கரிகால் சோழன் காவிரியின் குறுக்கே கட்டிய அணையின் பெயர் என்ன?
(அ) வைகை அணை (ஆ) பாபநாசம் அணை **(இ) கல்லணை** (ஈ) சாத்தனூர் அணை

35. பின்வரும் மாநிலங்களில் தேசிய சராசரியைவிட கல்வி அறிவு விகிதம் (2011) அதிகமாக உள்ள மாநிலம் எது?
(அ) ஆந்திரப் பிரதேசம் (ஆ) உத்திரப்பிரதேசம் (இ) தமிழ்நாடு **(ஈ) கேரளா**

36. சிறார் நீதிசட்டம் 2015 செயல்பாட்டுக்கு வந்த நாள்
(அ) ஜனவரி 14, 2016 **(ஆ) ஜனவரி 15, 2016**
(இ) ஜனவரி 16, 2016 (ஈ) ஜனவரி 17, 2016

37. "மேக் இன் இந்தியா" பிரச்சாரச் சின்னத்தில் உள்ள விலங்கு எது?
(அ) யானை (ஆ) பசு (இ) மயில் **(ஈ) சிங்கம்**

38. இந்து மதச்சீர்திருத்தத்தின் லூதர் என்ப்படுபவர் யார்?
(அ) ராஜாராம் மோகன்ராய் **(ஆ) தயானந்த சரஸ்வதி**
(இ) சுவாமி விவேகானந்தர் (ஈ) ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

39. ஓர் அசலானது 4 ஆண்டுகளில் இரண்டு மடங்காகிறது எனில் வட்டி வீதத்தைக் காண்க:
(அ) 5% (ஆ) 15% **(இ) 25%** (ஈ) 35%

40. ஒரு கடிகாரம் 7–யைத் தாக்க 7 வினாடிகள் ஆகும் என்று வைத்துக் கொள்ளுங்கள், அதே கடிகாரம் 10–யைத் தாக்க எவ்வளவு நேரம் ஆகும்
(அ) 16.5 வினாடிகள் (ஆ) 14.5 வினாடிகள் (இ) 12.5 வினாடிகள் **(ஈ) 10.5 வினாடிகள்**

41. ஒரு செவ்வக வயலின் நீளம் மற்றும் அகலம் 3 : 2 என்ற விகிதத்தில் உள்ளன. வயலின் பரப்பளவு 3456 மீ$^2$ ஆக இருந்தால் வயலுக்கு வேலி அமைப்பதற்கான செலவை மீட்டருக்கு ரூ.3.50 வீதம் காண்க:
(அ) ரூ.12, 096 (ஆ) ரூ.2, 016 (இ) ரூ.84 **(ஈ) ரூ.840**

42. 16 செ.மீ ஆரமுள்ள ஓர் உலோக பந்து, உருக்கப்பட்டு 2 செ.மீ. ஆரமுள்ள சிறு பந்துளகளாக்கப்பட்டால், எத்தனை பந்துகள் கிடைக்கும்?
(அ) 496 **(ஆ) 512** (இ) 672 (ஈ) 768

43. $x^3 - a^3$ மற்றும் $(x-a)^2$ இவற்றின் மீ.பொ.ம
(அ) $(x^3-a^3)(x+a)$ (ஆ) $(x^3-a^3)(x-a)^2$ **(இ) $(x-a)^2(x^2+ax+a^2)$** (ஈ) $(x+a)^2(x^2+ax+a^2)$

44. தொடரை நிறைவு செய்க:
1, 1, 1.5, 3, 7.5, ------------
(அ) 11 (ஆ) 25.5 **(இ) 22.5** (ஈ) 10.5

45. $a^{m+1}$, $a^{m+2}$, $a^{m+3}$ ன் மீப்பெரு பொது வகுத்தி என்பது
(அ) $a^{m+3}$ (ஆ) $a^{m+2}$ **(இ) $a^{m+1}$** (ஈ) $a^m$

46. ஒரு பால்காரரிடம் 175 லிட்டர் பசும்பாலும் 105 லிட்டர் எருமைப்பாலும் உள்ளது. இவற்றை அவர் சம கொள்ளளவுக் கொண்ட இருவகையான கலன்களில் அடைத்து விற்க விருப்பப்படுகிறார். இவ்வாறு விற்பதற்குத் தேவைப்படும் கலன்களின் அதிகபட்ச கொள்ளளவு எவ்வளவு?
(அ) 15 லிட்டர் (ஆ) 17 லிட்டர் (இ) 25 லிட்டர் **(ஈ) 35 லிட்டர்**

47. A1, C3, F6, J10, O15, ?
**(அ) U21** (ஆ) V21 (இ) V20 (ஈ) U20

48. இரு நபர்களின் வயதுகளின் விகிதம் 1 : 3, வயதுகளின் பெருக்கற்பலன் 48 எனில் அவர்களின் வயதுகளின் வித்தியாசம் என்ன?
(அ) 2 (ஆ) 12 **(இ) 8** (ஈ) 4

49. 180 மீ நீளமுள்ள ஒரு பாயினை 15 பெண்கள் 12 நாட்களில் செய்தனர். 512 மீ நீளமுள்ள ஒரு பாயினை 32 பெண்கள் செய்ய எத்தனை நாட்கள் ஆகும்?
**(அ) 16 நாட்கள்** (ஆ) 12 நாட்கள் (இ) 18 நாட்கள் (ஈ) 24 நாட்கள்

50. ஒரு மாணவர் 31% மதிப்பெண்களைப் பெற்று 12 மதிப்பெண்கள் குறைவாக பெற்றதால் தேர்ச்சி பெறவில்லை. தேர்ச்சி பெற 35% மதிப்பெண்கள் தேவை எனில் தேர்வின் மொத்த மதிப்பெண்களைக் காண்க:
(அ) 300 (ஆ) 400 **(இ) 500** (ஈ) 350

51. நம்முடைய பூமியில் பூக்கும் தாவரங்கள் எந்தப்பகுதியில் பெரும்பான்மையாக உள்ளது?
(அ) துருவப்பகுதி (ஆ) உயர் மலைப்பகுதி
**(இ) சமவெளி மற்றும் குன்றுப் பகுதிகள்** (ஈ) வறண்ட பாலைவனப் பகுதி

52. கீழ்க்காணும் கருவிகளில் எது காற்றின் துகளுரு மாசுக்களை நீக்க மின்சக்தி நிலையங்கள், சிமெண்ட் தொழிற்சாலைகள், காகிதத் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறதுது?
**(அ) நிலைமின் வீழ்படிவாக்கி (எலக்ட்ரோஸ்டேடிக் பிரிசிப்பிடேட்டார்)**
(ஆ) வினையூக்க மாற்றி (கேட்டலடிக் கன்வர்டர்)
(இ) சொட்டுமுறை வடிகட்டி
(ஈ) மணல் வடிகட்டி

53. பின்வருவனவற்றில் அமிலம் எது?
(அ) CaO (ஆ) BaO **(இ) $SiO_2$** (ஈ) $Na_2O$

54. கீழ்க்கண்டவற்றுள் எது மாறா விசை?
(அ) நிலை மின்னியல் விசை (ஆ) ஈர்ப்பியல் விசை
(இ) உராய்வு விசை **(ஈ) அ மற்றும் ஆ இரண்டும் சரி**

55. பின்வரும் அறிவியலாளர்களின் பெயர்களோடு அவர்களின் கண்டுபிடிப்புகளைப் பொருத்துக:
அ. விஸ்வேஸ்வராயா – 1. மிக இலகுரக விமானத்தை வடிவமைத்தல்
ஆ, வெங்கட்ராமன் ராதாகிருஷ்ணன் – 2. தானியங்கி மதகு கதவுகள்
இ. சந்திரசேகர் – 3. சூரியக் கதிர்களின் எடை மற்றும் அழுதத்தினை அளவிடுவதற்கான கருவி
ஈ. மேக்நாச்சாஹா – 4. நட்சத்திரங்களிலிருந்து ஆற்றல் கதிர்வீச்சு

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 2 | 4 | 1 | 3 |
| **ஆ.** | **2** | **1** | **4** | **3** |
| இ. | 2 | 3 | 1 | 4 |
| ஈ. | 1 | 2 | 4 | 3 |

56. மாண்புமிகு தமிழக முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் 16.11.2021 அன்று தொழில் வளர்ச்சி சார்பில் புதிய வகை வணிகப் பெயர் கொண்ட சிமெண்டை அறிமுகம் செய்தார்
(அ) டால்மியா சிமெண்ட் (ஆ) மகா சிமெண்ட் **(இ) வலிமை சிமெண்ட்** (ஈ) ராம்கோ சிமெண்ட்

57. பின்வரும் அமைப்புகளில் எது இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணக்கிடுகிறது?
**(அ) தேசிய புள்ளியியல் அலுவலகம்** (ஆ) மாநில புள்ளியியல் அலுவலகம்
(இ) இந்திய புள்ளியியல் அலுவலகம் (ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

58. கீழ்க்காண்பவைகளை பொருத்துக:

| விழாக்கள் | மாநிலங்கள் |
|---|---|
| அ. லோசார் | 1. தெலங்கானா |
| ஆ. போனாலு | 2. லடாக் |
| இ. பூரம் | 3. அசோம் |
| ஈ. பிகு | 4. கேரளா |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **2** | **1** | **4** | **3** |
| ஆ. | 2 | 1 | 3 | 4 |
| இ. | 1 | 2 | 3 | 4 |
| ஈ. | 3 | 2 | 1 | 4 |

59. மிதமான மழைப்பொழிவு பகுதியில், ஜனவரி மற்றும் ஜீலை மாதத்தின் சராசரி வெப்பநிலையின் வேறுபாடு
(அ) $16^{o}C–30^{o}C$ **(ஆ) $18^{o}C–32^{o}C$** (இ) $20^{o}C–34^{o}C$ (ஈ) $22^{o}C–36^{o}C$

60. இந்தியாவின் பழமையான குடிமக்கள் என்று கருதப்படுகிறவர்கள்
(அ) மங்கோலியர்கள் **(ஆ) நீக்ரோக்கள்**
(இ) இந்தோ ஆரியர்கள் (ஈ) மத்திய தரைகடல் வாழ் மக்கள்

61. கீழ்க்கண்ட வரிசைப்பட்டியல் I, II கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடைகளை பொருத்துக:

| வரிசை I | வரிசை II |
|---|---|
| அ. புலந்த் தர்வாசா, பதேப்பூர் சிகரி | 1. அலாவுதின் கில்ஜி |
| ஆ. அலாய் தர்வாசா, டில்லி | 2. அக்பர் |
| இ. மோதி மசூதி, டில்லி | 3. ஷாஜஹான் |
| ஈ. மோதி மசூதி, ஆக்ரா | 4. ஔரங்கசீப் |

குறியீடுகள்:

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 1 | 2 | 3 | 4 |
| ஆ. | 2 | 1 | 4 | 3 |
| **இ.** | **1** | **2** | **4** | **3** |
| ஈ. | 4 | 1 | 3 | 2 |

62. மாலிக் பக்கிருதீன் ஜீனா என்பது எந்த சுல்தானின் இயற்பெயர்
(அ) மாலிக்கபூர் **(ஆ) முகமது பின் துக்ளக்** (இ) முஜாகீத் (ஈ) நிசாம் ஷா

63. மதச் சார்பற்ற என்பதன் உண்மையான பொருள்
(அ) ஒரு மத அரசு **(ஆ) அரச மதம் என்ற ஒன்று இல்லை**
(இ) இரு மத அரசு (ஈ) பல மத அரசு

64. பின்வரும் மாநிலங்களில் ஈரவை உள்ள சட்டமன்றம் எவை?
1. பீகார்
2. குஜராத்
3. கர்நாடகா
4. உத்திரபிரதேசம்
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:
(அ) 1, 2, 3 மற்றும் 4 **(ஆ) 1, 3 மற்றும் 4 மட்டும்** (இ) 2, 3 மற்றும் 4 மட்டும் (ஈ) 1 மற்றும் 4 மட்டும்

65. இந்திய அரசமைப்பில் அடிப்படைக் கடமைகள் எந்தப் பகுதியில் எடுத்துரைக்கப்படுள்ளது?
(அ) பாகம் II (ஆ) பாகம் III **(இ) பாகம் IV A** (ஈ) பாகம் V

66. "ரிட் ஆப் மேண்டமுஸ்" என்பதன் பொருள் (Writ of Mandamus)

(அ) ஆட்கொணர்வு (ஆ) தடை செய்தல் (இ) சான்றளித்தல் **(ஈ) ஆணையிடுதல்**

67. இந்திய அரசமைப்பு முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு
(அ) 26 டிசம்பர் 1949 (ஆ) 26 ஜனவரி 1950 **(இ) 26 நவம்பர் 1949** (ஈ) 30 நவம்பர் 1949

68. கீழ்க்காணும் எந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலமாகக் "கல்வி" என்பது மாநிலப் பட்டியலில் இருந்து பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது?
(அ) 24-வது திருத்தச்சட்டம் (ஆ) 25-வது திருத்தச்சட்டம்
**(இ) 42-வது திருத்தச்சட்டம்** (ஈ) 44-வது திருத்தச்சட்டம்

69. PURA என்பதன் விரிவாக்கம்
(அ) பொதுப் பயன்பாடுகள் ஒழுங்குமுறை ஆணையம்
(ஆ) பொதுப் பயன்பாட்டு ஒழுங்குமுறைச் சட்டம்
**(இ) கிராமப்புறங்களில் நகர்ப்புற வசதிகளை வழங்குதல்**
(ஈ) பிலிப்பைன்ஸ் யூராலஜி குடியிருப்பாளர்கள் சங்கம்

70. LPG மாதிரி வளர்ச்சியை அறிமுகப்படுத்தியவர்
(அ) ராஜீவ் காந்தி **(ஆ) Dr.மன்மோகன் சிங்** (இ) வி.பி.சிங் (ஈ) வாஜ்பாய்

71. இந்தியாவின் முதல் ஐந்தாண்டு திட்டம் -------- மாதிரியைப் பின்பற்றியது
**(அ) ஹராட்-டோமர்** (ஆ) ஆல்பிரட் மார்ஷல்
(இ) பால் சாமுவேல்சன் (ஈ) ஏ.கே.சென் இன்டெக்ஸ்

72. பனகல் அமைச்சரவையின் போது தமிழ்நாட்டில் பணியாளர் தேர்வு வாரியம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?
(அ) 1916 (ஆ) 1920 **(இ) 1924** (ஈ) 1923

73. ஜின்னா, தனது 14 அம்ச திட்டத்தை அறிவித்த நாள்
(அ) டிசம்பர் 13, 1928 **(ஆ) டிசம்பர் 31, 1928** (இ) டிசம்பர் 13, 1929 (ஈ) டிசம்பர் 31, 1929

74. எந்த வகை சமூக இயக்கம் காந்திய தேசியத்திற்கு பெரிதும் பங்களித்தது?
(அ) போரியல் இயக்கம் (ஆ) இடதுசாரி இயக்கம்
**(இ) உழவர் இயக்கம்** (ஈ) பழங்குடி இயக்கம்

75. லாலா லஜபதிராய் இறந்தது எப்போது?
(அ) 17 நவம்பர் 1926 (ஆ) 17 நவம்பர் 1927 **(இ)17 நவம்பர் 1928** (ஈ) 17 நவம்பர் 1929

76. கல்நிறுத்தி வைக்கும் மரபினை தமிழகத்தில் காணப்படும் இடம்
(அ) கொடுமணல் (ஆ) காஞ்சிபுரம் (இ) ஆதிச்சநல்லூர் **(ஈ) கீழடி**

77. மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட இடம்
(அ) விருபாட்சி (ஆ) காளையார் கோவில் **(இ) திருப்பத்தூர்** (ஈ) கயத்தாறு

78. ----------- இயக்கமானது "காங்கிரஸின் கலகம்" என்று குறிப்பிடப்பட்டது
(அ) ஒத்துழையாமை இயக்கம் (ஆ) சைமன் குழு/புறக்கணிப்பு இயக்கம்
(இ) சட்ட மறுப்பு இயக்கம் **(ஈ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்**

79. பிரிட்டிஷ் மற்றும் கிழக்கிந்திய கம்பெனியின் கடலாதிக்க வலிமைக்கு சவாலாக இருந்த தமிழனின் பெயரை குறிப்படுக:
(அ) கிருஷ்ணமாச்சாரி **(ஆ) வ.உ.சிதம்பரம்பிள்ளை** (இ) ஈ.வே.ராமசாமி (ஈ) சி.ராஜாஜி

80. எந்த ஆங்கில படை அதிகாரி 1783-ல் பாஞ்சாலங் குறிச்சி கோட்டையை தாக்கினார்?

(அ) வில்லியம் பிளின்ட் **(ஆ) வில்லியம் புல்லர்டன்**
(இ) பானர்மேன் (ஈ) காலின் மெக்காலே

81. மருதுபாண்டியன் மற்றும் வெள்ளை மருது தூக்கிலிடப்பட்ட கோட்டை
**(அ) திருப்பத்தூர்** (ஆ) வெள்ளைக்கோட்டை (இ) திருமயம் (ஈ) திண்டுக்கல்

82. 1926ஆம் ஆண்டு நடைபெற்ற "அகில உலக பெண்கள் வாக்குரிமை ஒன்றிய மாநாட்டில்" இந்தியாவின் சார்பில் பங்கேற்றவர் யார்?
(அ) அன்னிபெசன்ட் (ஆ) மணியம்மை **(இ) ருக்மணி லட்சுமபதி** (ஈ) விஜய லட்சுமி பண்டிட்

83. சிவகங்கை வேலுநாச்சியாரின் "உடையாள் படை"க்கு தலைமையேற்றவரின் பெயரை குறிப்பிடுக:
(அ) வெள்ளச்சி (ஆ) லஷ்மி **(இ) குயிலி** (ஈ) முத்தாத்தாள்

84. 2020-21ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் முக்கிய நீர்ப்பாசன ஆதாரமாக ------ இருந்தது
(அ) கால்வாய்ப் பாசனம் (ஆ) நீர்தேகக்கப் பாசனம்
(இ) குழாய்க் கிணற்றுப் பாசனம் **(ஈ) திறந்தவெளி கிணற்றுப் பாசனம்**

85. கீழ்க்கண்டவற்றுள் எந்த இணை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது?
1. மேட்டூர்-நீர்மின் திட்டம்
2. நெய்வேலி-அணுஉலை திட்டம்
3. கல்பாக்கம்-வீட்டு உபயோகப் பொருட்கள்
4. திருப்பூர்-தோல் பொருட்கள்
(அ) 1 மட்டும் சரி **(ஆ) 1 மற்றும் 2 சரி** (இ) 1 மற்றும் 3 சரி (ஈ) 3 மற்றும் 4 சரி

86. தமிழக அரசால், "தொட்டில் குழந்தைத் திட்டம்", -----------ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது
(அ) 1991 **(ஆ) 1992** (இ) 1993 (ஈ) 1994

87. சாதிச் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையைச் சரிபார்த்து தருவதற்குப் பின்வருவனவற்றுள் யார் பொறுப்பு?
(அ) கிராம நிர்வாக அலுவலர் மட்டும் (ஆ) வட்டாட்சியர் மட்டும்
(இ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் **(ஈ) மாவட்ட கண்காணிப்புக்குழு**

88. எத்தனை ஆண்டுகளில் ரூ.2, 000 ஆனது ஆண்டுக்கு 10% தனி வட்டியில் ரூ.3, 600 ஆக மாறும்?
(அ) 2 ஆண்டுகள் (ஆ) 16 ஆண்டுகள் **(இ) 8 ஆண்டுகள்** (ஈ) 10 ஆண்டுகள்

89. மீனா 9% வட்டிவீதத்தில் ஒரு வருடத்திற்கான தனிவட்டி ரூ.45 தருகிறார் மற்றும் அவர் கடனாகப் பெற்ற தொகை ரூ.4x எனில் x-ன் மதிப்பு காண்க:
(அ) 500 (ஆ) 250 **(இ) 125** (ஈ) 75

90. இலண்டனில் உள்ள ஒரு நினைவுச் சின்னத்தில் MDCLXVI என பொறிக்கப்பட்டுள்ளது. இது குறிக்கும் எண் எது?
**(அ) 1666** (ஆ) 11166 (இ) 111516 (ஈ) 1515151

91. அசல் ரூ.3, 000 ஆண்டுக்கு 10% கூட்டு வட்டி வீதப்படி, ரூ.3, 993 ஆக எத்தனை ஆண்டுகள் ஆகும்?
(அ) 4 ஆண்டுகள் (ஆ) 1 ஆண்டு (இ) 2 ஆண்டுகள் **(ஈ) 3 ஆண்டுகள்**

92. நீளம் 3 மீ மற்றும் விட்டம் 2.8 மீ உடைய ஒரு சமன்படுத்தும் உருளையைக் கொண்டு ஒரு தோட்டம் சமன்படுத்தப்படுகிறது. 8 சுற்றுகளில் எவ்வளவு பரப்பை உருளை சமன் செய்யும்?
(அ) 212.2 மீ$^2$ (ஆ) 252.2 மீ$^2$ **(இ) 211.2 மீ$^2$** (ஈ) 211.5 மீ$^2$

93. ஒரு முக்கோணத்தின் பக்க அளவுகள் 3 செ.மீ, 4 செ.மீ மற்றும் 5 செ.மீ எனில் அதன் பரப்பளவு
(அ) 3 செமீ$^2$ **(ஆ) 6 செ.மீ$^2$** (இ) 9 செ.மீ$^2$ (ஈ) 12 செ.மீ$^2$

94. 1+2+3+…+K = 3325 எனில் $1^3+2^3+3^3+..K^3$ யின் மதிப்பு காண்க:

**(அ) 105625** (ஆ) 52065 (இ) 67714 (ஈ) 12730

95. 1, 8, 27, ?, 216 என்ற தொடரின் விடுபட்ட உறுப்பைக் காண்க:

(அ) 49 (ஆ) 100 **(இ) 64** (ஈ) 46

96. கீழ்க்கண்ட தொடரைக் கவனித்து விடையளிக்கவும்.

D ₹ = 8 Q + $ O – @ Z % 6 d # A ? 7 > G B

மேற்கண்ட தொடர் வலமிருந்து இடமாக எழுதப்படும்போது 17வது உறுப்பின் இடப்புறமாக அமைந்த 8வது உறுப்பு எது?

(அ) – (ஆ) d **(இ) 6** (ஈ) %

97. இனியன் 5 டசன் முட்டைகளை வாங்கினார். அதில் 10 முட்டைகள் கெட்டுவிட்டால், நல்ல முட்டைகளின் சதவீதத்தைக் காண்க:

(அ) 1.2% **(ஆ) 83.33%** (இ) 8.33% (ஈ) 10%

98. ஒரு புத்தகத்தின் விலையில் 10% தள்ளுபடி செய்தாலும் ஒரு வியாபாரிக்கு 10% இலாபம் கிடைக்கிறது. அப்புத்தகத்தின குறித்த விலை ₹220 எனில் அதன் அடக்க விலை யாது?

(அ) ரூ.120 (ஆ) ரூ.150 **(இ) ரூ.180** (ஈ) ரூ.220

99. இரு எண்களின் கூடுதலானது இரண்டாம் எண்ணின் 116 2/3% எனில் முதல் மற்றும் இரண்டாம் எண்களுக்கு இடையே உள்ள விகிதம்

**(அ) 1 : 6** (ஆ) 3 : 7 (இ) 7 : 3 (ஈ) 7 : 4

100. சம அளவுள்ள 6 குழாய்கள் 1 மணி 20 நிமிடங்களில் ஒரு தண்ணீர் தொட்டியை நிரப்புகிறது எனில் அதே அளவுள்ள 5 குழாய்கள் அத்தொட்டியை எவ்வளவு நேரத்தில் நிரப்பும்?

**(அ) 1 மணி 36 நிமிடங்கள்** (ஆ) 1 மணி 26 நிமிடங்கள்

(இ) 1 மணி 50 நிமிடங்கள் (ஈ) 1 மணி 56 நிமிடங்கள்

winmeen.com